
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1217

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

59

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!




# தமிழர் அணி தயாராகட்டும்!

*1968-ஆம் ஆண்டில், கடற்கரையில் நிறுவப்பட்ட கண்ணகி சிலையைத் திறந்து வைத்தது மட்டுமல்ல; சிலையை வடிவமைப்பதிலும் பங்காற்றியவர் கலைஞர். 'கண்ணகி நீதி கேட்பதற்காக பாண்டிய மன்னன் அவைக்குள் நுழைந்தபோது, "காவியுகு நீரும் கையிற் தனிச் சிலம்பும் ஆவி குடிபோன அவ்வடிவும் கொண்டு வந்தாள்" என்று இளங்கோவடிகள் சித்திரித்துள்ளவாறே சிலை அமைய வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு; அவ்வாறே சிலை தயாரிக்கப்பட்ட சிற்பக்கூடத்துக்கு அண்ணாவும் நாவலரும், பேராசிரியரும் நானும் எத்தனையோ முறை சென்று பார்வையிட்டு; திருத்தங்கள் கூறி அப்படி வைக்கப்பட்டது அந்த சிலை" என உடன்பிறப்புகளுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிடுகிறார். அந்த சிலை பேரறிஞர் அண்ணாவின் எண்ணப்படி, அவரது தலைமையில் உருவாக்கப்பட்டு நிறுவப்பட்டது. அதனால்தான், அந்தக் கண்ணகி சிலை அவரது அரசியல் போராட்டத்துக்கு முக்கிய காரணமாக இருந்தது.*

*அவரது எழுத்துலக வரலாற்றிலும் கண்ணகிக்குத் தனி இடம் உள்ளது. அவரது திரைக்கதையில் 'பூம்புகார்' திரைப்படம் உருவானதைப்போலவே, 1975-ஆம் ஆண்டில், பழைய பூம்புகாரை புதிய பூம்புகாராக உருமாற்றி, 'இந்திர விழா' எனத் தமிழறிஞர்கள், ஆர்வலர்களைக் கொண்டு பெரும் விழா எடுத்தவர். சிலப்பதிகாரத்தை, நாடகக் காப்பியமாகவும் எழுதியவர் கலைஞர். 1968-இல் உலகத்தமிழ் மாநாட்டின்போது, வெளியிடப்பட்ட அந்த நூலுக்கு பேரறிஞர் அண்ணா அணிந்துரை எழுதியிருப்பார். சிலப்பதிகார காப்பியத்தில், அவரது ஈடுபாடு, சிலை அமைப்பதில் அவரது பங்கு, அண்ணாவின் நினைவுகள் என அனைத்தும் சேர்ந்து கண்ணகி சிலைப் போராட்டத்தைத் தீவிரமாக்கத் தூண்டியது எனலாம்.*

*சட்டப்போராட்டம் ஒரு பக்கம், மக்கள் போராட்டம் மறுபக்கம் என அவற்றுக்குத் தலைமை ஏற்றார் கலைஞர்.*

*"குழந்தையின் கையிலே இருக்கின்ற கரடி பொம்மைக்கும் இந்தக் கண்ணகி சிலைக்கும் என்ன வித்தியாசம்?" என இனத்துக்கான போராட்டத்தினை விமர்சனம் செய்தது தமிழின் முன்னணி வார இதழ். 'கண்ணகி சிலை பிரச்சினை தெருவோரத்து சாதாரண மனிதனைத் தொடவில்லை' என ஆங்கில நாளிதழ் ஒன்று தலையங்கம் எழுதி, ஒன்றுமில்லாத பிரச்சினைக்காக தி.மு.க. நிழல் யுத்தம் நடத்துவதாக கேலி செய்தது. அதற்கும் தனது எழுத்துகள் வழி 'அவாள்'களின் கலாச்சார யுத்தம் எனப் பதிலடி அளித்து வந்தார்.*

*"6 கோடி தமிழர்களின் மானத்துக்கு மட்டுமல்ல; அயல் நாடுகள் பலவற்றில் வாழுகிற தமிழர்களின் மானத்துக்கும் அறைகூவல் விடுவதுபோல அகற்றப்பட்டுள்ளது என்றால், ''உன் தொடையில் கயிறு திரிக்கும்போது தூங்கிக்கொண்டிருப்பதா தமிழா?*

> **சிலையை மீட்கவும், மீண்டும் அதே இடத்தில் நிறுவவும் தமிழ்நாட்டுக்கு ஆட்சி மாற்றம் தேவையாக இருந்தது. அதையும் நிகழ்த்தினார் கலைஞர்.**

### விமர்சனங்களுக்குப் பதில்

*மீண்டும் கண்ணகி சிலை, முன்பு அமைக்கப்பட்டிருந்த இடத்திலேயே அமைக்கப்பட வேண்டும் என கலைஞர் தலைமையில் அமைக்கப்பட்ட போராட்டக் குழு, "போராட்டத்தைத் தவிர, வேறு வழி என்ன இருக்கிறது" என்றது. 'தமிழர் அணி தயாராகட்டும்' என அறைகூவல் விடுத்தார் கலைஞர். "தமிழன் தன்னுடைய மானத்தைத் தொலைத்துவிட்டு, வாழ விரும்பவில்லை. அதைவிட அவன் மரணத்தைத் தழுவத் தயாராக இருக்கிறான்" என்று கலைஞர் விடுத்த அழைப்பினை ஏற்று, தமிழ்நாடே திரண்டது.*

*பாவம் சில தமிழர்கள், தமது முதுகெலும்பை இழந்து விடவில்லை - யானைத் தந்தம்போல அதனை நல்ல விலைக்கல்லவா விற்று விட்டார்கள். விற்றபொருள் திரும்பக் கிடைக்குமா என்ன?" என்று கேட்ட அவரது கடிதங்கள் தமிழர்களின் உள்ளங்களில் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டன.*

*'நமது தமிழ்க் கலாசாரத்தையே தரைமட்டமாக்கிடத் துணிந்து, அன்றொரு நாள் நமது அருமை அண்ணா அமைத்த சிலையைத் தூக்கி எறிந்தோர், இதுவும் செய்வர், இன்னமும் செய்வர் - நாம் இளிச்சவாயர்களாகவே இருந்தால்!" என 'முரசொலி'யில் உடன்பிறப்புக் களுக்கு அவரது கடிதம் தன்மான உணர்ச்சிகளைத் தூண்டியது.*

*அதற்கிடையேதான் 2002, ஜனவரி 5-இல் சென்னை கடற்கரைக் கூட்டத்தை, கலைஞர் தலைமையில் நடத்தியது போராட்டக்குழு. **'தமிழ்ப் பண்பாட்டு மாநாடு'** என்கிற பெயரில் நடத்தப்பட்ட மாநாட்டுக்கு, கலைஞரின் அழைப்புகள் தமிழ்நாட்டைத் திரட்டி, சென்னை கடற்கரைக்குக் கொண்டு வந்தது.*

*ஊருக்கு ஊர் கண்ணகி சிலைகள் அமையட்டும், சென்னை பேரணிக்கு வருவோர் வாகனங்களில் கண்ணகி உருவங்கள் ஒளி விடட்டும்.*

***கண்ணகி சிலை!***

***கண்ணகி சிலை!***

***கண்ணகி சிலை!***

*இந்த முழக்கம், தமிழ்நாட்டு வீதிதோறும், வீடுதோறும் கேட்க வேண்டும்! என சென்னையில் பண்பாட்டுத் திருவிழாவுக்கு அழைப்பு விடுத்தார். அங்குதான், 'தமிழர்களின் மான உணர்ச்சிக்கு விடப்பட்ட சவால்' என அறைகூவல் விடுத்தார்.*

### அன்பகம் - கண்ணகி சிலை

*கலைஞர், தமிழர்களின் உணர்ச்சிப்பெருக்கைத் தூண்டிவிட்டதன் விளைவு, ஊருக்கு ஊர் கண்ணகி சிலை வைக்கத் தொடங்கினர். சில ஊர்களில் கோயிலும் கட்டத் தொடங்கினர். கலைஞரின் வேகத்துக்கு, கழகத்தின் இளைஞர் அணி உடன் நின்றது. இளைஞர் அணியின் தலைமையகமான 'அன்பகம்' முகப்பில் கண்ணகி சிலை அமைக்க, கழகத்தின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.*

*அதுபோலவே, 2002 ஜனவரி 12-ஆம் தேதி, 'அன்பகம்' முகப்பில், கற்பின் கொழுந்து, பொற்பின் செல்வி கண்ணகி சிலைத் திறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. அம்மையார் அகற்றிய கண்ணகி சிலை போலவே, அதே தோற்றத்தில் அமைக்கப்பட்ட சிலையை 'அன்பகம்' முகப்பில், பேராசிரியர் தலைமையில் திறந்து வைத்தார் கலைஞர். கழக இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அதோடு கண்ணகி விவகாரத்தை விடவில்லை கலைஞர்.*

*அம்மையார் அரசு, கடற்கரை சாலையில் அகற்றி எடுத்துச் சென்ற கண்ணகி சிலை முதலில் பொதுப்பணித்துறை அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் எங்கு எடுத்துச் செல்லப்பட்டது என யாருக்கும் சொல்லப்படவில்லை. அந்த சிலையை மீட்கவும், மீண்டும் அதே இடத்தில் நிறுவவும் தமிழ்நாட்டுக்கு ஆட்சி மாற்றம் தேவையாக இருந்தது. அதையும் நிகழ்த்தினார் கலைஞர்.*

**...தொடரும்**

---

## தீ பரவட்டும்!

சென்னையில் மே 30 அன்று இளைய தலைமுறை நடத்திய GEN Z MEET மிகப் பெரிய எழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. GEN Z தலைமுறை இளைஞர்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு, 'நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இருக்கிறோம்' என்று அறிவிப்பு செய்த அந்த நிகழ்ச்சிக்கு காவல்துறை மூலம் தடைகளை விதித்துப் பார்த்தது த.வெ.க. அரசு. ஆனால், இளைஞர்கள் காட்டிய உறுதியால், அந்த நிகழ்ச்சி அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கிற்கு மாற்றப்பட்டு, மிகப் பிரமாண்டமாக நடந்தது. 50 பேர் வருவார்கள் என்று எதிர்பார்த்த நிலையில், 500-க்கும் மேற்பட்டோர் திரண்டு ஆச்சர்யத்தை ஏற்படுத்தினர்.

சமூக ஊடகங்கள் முதல் காட்சி ஊடகங்கள் வரை அனைத்திலும் இந்த சந்திப்பு பேசுபொருளானது. தமிழ்நாடு தழுவிய அளவில், பேசுபொருளான இந்த GEN Z MEET, இப்போது தமிழ்நாடு முழுவதும் தீப்போல பரவத் தொடங்கியுள்ளது. வருகிற ஜூன் 7-ஆம் தேதி, தஞ்சையில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் GEN Z MEET நடைபெறும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது. தென்காசி, கோவை, விழுப்புரத்திலும் GEN Z MEET நடைபெறுவதற்கான பணிகள் தொடங்கியிருக்கின்றன. இந்த சந்திப்புகளுக்கு ஆர்வம் காட்டும் இளைஞர்களில் தி.மு.கழகத்தில் இதுவரை உறுப்பினராக இல்லாத ஆயிரக்கணக்கானோரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுதொடர்பாக, சமூக வலைதளங்களில் உரையாடி வருகின்றனர்.

கொள்கைப் பாசறையாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து செயலாற்றவேண்டிய அவசியத்தை GEN Z தலைமுறைக்கு, ஒரு மாத கால ஆட்சியிலேயே உணர்த்தி விட்டார்கள் இன்றைய ஆட்சியாளர்கள். தீ பரவட்டும்!

---

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரிடம் பிறந்தநாள் வாழ்த்து!



'ஓ.சி.எஃப்.' ராஜேந்திரன்

1998-ஆம் ஆண்டு, ஜூன் 10 அன்று எனது பிறந்த நாளை முன்னிட்டு, நானும் என் மனைவியும் அண்ணா அறிவாலயம் சென்று தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெறலாம் எனச் சென்றிருந்தோம். நாங்கள் அண்ணா அறிவாலயம் சென்ற நேரத்தில், தலைவர் கலைஞர் வீட்டுக்குப் புறப்பட்டுவிட்டார். நாங்கள் கார் அருகில் நின்றிருந்தோம். காரில் ஏற வந்தவர் எங்களைப் பார்த்து, "என்ன?" என்று கேட்டார். "இன்றைக்கு எனக்கு பிறந்தநாள், நானும் என் மனைவியும் தங்களிடம் வாழ்த்து பெற வந்திருக்கிறோம்" என்று சொன்னவுடன் எங்களை அருகே அழைத்து வாழ்த்தியதுடன், "எங்கிருந்து வருகிறீர்கள், உங்கள் பகுதியில் கழகப் பணி எல்லாம் எப்படி நடக்கிறது?" எனக் கேட்டு விசாரித்த பின்பு, காரில் ஏறி புறப்பட்டார். அந்த நிகழ்வு இன்றைக்கும் என் மனதில் நிலைத்து நிற்கிறது. சுமார் 29 ஆண்டுகளுக்கு முன் எடுத்த இந்தப் புகைப்படம் இன்னும் என் வீட்டை அலங்கரித்துக்கொண்டிருக்கிறது.

**- 'ஓ.சி.எஃப்.' ராஜேந்திரன்,**
**அமைப்பாளர், தி.மு.க. இலக்கிய அணி,**
**வெள்ளானூர் ஊராட்சி,**
**வில்லிவாக்கம் வடக்கு, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## கருவூலம்

### காங்கிரஸ் கோட்டைவிடும்!

1962-ஆம் ஆண்டு தேர்தலில், கழகம் 50 இடங்களில் வென்று எதிர்க்கட்சியானபோது, சென்னை, கடற்கரையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் பேசிய பேரறிஞர் அண்ணா, "எப்படி எங்கள் 15 பேரையும் ஒழிப்போம்" என்று சொல்லி, 50 இடங்களைக் கோட்டை விட்டார்களோ, அதேபோல 'அடுத்த தேர்தலில் இந்த 50 பேரையும் ஒழிப்போம்' என்று கூறி, இன்னொரு 75 இடங்களை கோட்டை விடுவார்கள்" என்றார். அதுபோல கழகம் 1967-ஆம் ஆண்டு தேர்தலில், 138 இடங்களைக் கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900